IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.140/2013

Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Caste | : | |
| Father Name | : | தாமோதரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of November, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

1. எதிர் உரையை நான் சரியாக படிக்கவில்லை. 02.04.1974 ல் உள்ள பத்திரத்தில் உள்ள உயிலில் சர்வே எண்.275 மற்றும் 274 மற்றும் 285/2 ஆகிய எண்கள் குறித்து உயில் சாசனத்தில் எழுதப்பட்டுள்ள அந்த சொத்துக்களை என்னுடைய தகப்பனார் தாமோதரன் உயிலில் எழுதப்பட்ட சொத்துக்களை கிரையம் பெற்றோம் என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தெரியாது என்பது வழக்கிற்காக சொல்கிறேன் என்றாலும் ஏற்கனவே ஆவணத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் சாம்பசிவம் சாட்சியாக கையெழுத்திட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. என்னுடைய தந்தையார் தாமோதரனும், எனது பெரியப்பா சாம்பசிவமும் உயிலில் எழுதப்பட்டுள்ள சொத்தை 02.04.1974 கிரைய பத்திரத்தின் படி அதாவது ஆதியம்மாளிடம் இருந்து வாங்கிய கிரைய பத்திரத்தின் படி உயிலை ஏற்றுக் கொண்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. உயிலுக்கு முன்பே செட்டில்மென்ட் எழுதப்பட்டது. 2013 ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தங்கள் வழக்குறையில் சாம்பசிவத்திற்கு செட்டில்மென்ட் மூலமாக சொத்துக்கள் கொடுக்கப்பட்டதாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அந்த சொத்துக்கள் வழக்கு போடப்படும் காலத்தில் சாம்பசிவத்திடம்

இல்லை என்றால் சாம்பசிவம் குடும்ப சூழ்நிலை காரணமாக அவரது மகன் பெயரில் சொத்தை எழுதி வைத்துவிட்டார். ஆனால் அந்த காலகட்டத்தில் சொத்து அவரிடம் இல்லை என்று சொன்னால் சரிதான்.

3. சாம்பசிவத்திடம் சொத்துக்களே இல்லாத சூழ்நிலையில் அதை வழக்கு மூலமாக வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது ராஜு மேஸ்திரியின் தந்தையார் சொத்து என்றாலும் என்னைப் பொறுத்தமட்டில் பூர்வீக சொத்தின் வாரிசின் அடிப்படையில கூட்டுரிமை உரிமை சொத்தாக (Devolution) அடிப்படையில் நான் இருப்பதால் இந்த சொத்தானது ராஜு மேஸ்திரி தங்கள் தந்தையாருக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்தது என்று சொல்வது சரியா என்றால் சரியல்ல. மூதாதையார் சொத்துக்கள் பலமுறை பெரியப்புவின் மகன்கள் அப்புகான், மற்றும் ராஜு மேஸ்திரி இடையில் பாகப்பிரிவினை செய்து கொண்டதின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் இந்து கூட்டு குடும்ப சொத்தாக வியாபகம் அடைந்திருப்பதால் ராஜு மேஸ்திரியால் இந்த செட்டில்மென்டை எனது தந்தையாருக்கும், சாம்பசிவத்திற்கும் எழுதி வைத்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

4. மேலும் சர்வே எண்.276 ல் 1973 ஆம் ஆண்டு உயில் எழுதப்பட்ட காலத்தில் தான் 1 ஏக்கர் 37 சென்டாக இருந்தது. அதை 1/3 பாகம் என்று உயிலில் எழுதியுள்ளார் அந்த சொத்தில் 1 ஏக்கர் எங்களுக்கு கிடைத்திருப்பது மோசடிதனமானது என்று சொன்னால் சரியல்ல. 1972 பத்திரத்திலேயே 1 ஏக்கர் 37 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உயில் எழுதிய காலத்தில் 8 ஏக்கர் 94 சென்ட் மட்டும் தான் ராஜு மேஸ்திரியிடம் இருந்தது என்றாலும் நான் தாக்கல் செய்திருக்கும் ராஜு மேஸ்திரியின் மூல பத்திரமாக சொல்லியிருக்கும் அந்த பத்திரத்தில் விஸ்திரனம் 9 ஏக்கர்

63 சென்ட் 1967 ற்கு பிறது மாறிவிட்டது என்று சொன்னால் சரிதான்.

5. ஆனால் முதல் பிரதிவாதி ஆதியம்மாளின் கணவர் விஸ்வநாதன் 1 ஏக்கர் விற்றுவிட்டதால் 8 ஏக்கர் 63 சென்ட் என்று மாறிவிட்டது. அவ்வாறு இல்லை என்றாலும் சர்வே எண் .304/3, 305 அதில் உள்ள 1 ஏக்கர் சொத்தானது ராஜூமேஸ்திரியால் தான் விற்கப்ப்ட்டது என்று சொன்னால் சரியல்ல. மேலும் ஆதியம்மாளுக்கு, ராஜூமேஸ்தியால் எழுதப்பட்ட உயிலானது அவர் நல்ல மனநிலையில் இருந்த போது சாட்சயங்களின் அடிப்படையில் எழுதப்பட்டது தான் உண்மை என்றாலும் அதை செல்லாது என்று சொல்வது ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. 1973 ஆம் ஆண்டே உயில் எழுதிய பிறகே இறந்து விட்ட காரணத்தில் உயிலின் ஊர்ஜிதத் தன்மை உறுதிப்படுத்தப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்த வரை சாம்பசிவத்தை இணைக்காமல் இருப்பதாலும், சொத்து விவரத்தை வழக்குரையில் சொல்லாமல் விட்டுவிட்டதாலும், எழுதப்பட்ட உயில் 1973 ஆம் ஆண்டு என்பதாலும் 3 ஆண்டுகள் அல்லது 12 ஆண்டுகள் காலவரையரைக்குள் தாக்கல் செய்யவில்லை என்பதாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக் கூடியது என்று சொன்னால் சரியல்ல.

INBARANI Digitally signed by INBARANI

DISTRICT MUNSIF
KATPADI